[29th August 1970

Craft Teachers

*44. *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that Craft Teachers of similar qualifications are given different scales of pay in High Schools and Higher Elementary Schools ; and

(*b*) if so, the details thereof ?

கைவினைப் பயிற்சி ஆசிரியர்கள்

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உயர்நிலைப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பணியாற்றுகிற ஒரேவிதத் தகுதிகளையுடைய கைவினைப் பயிற்சி ஆசிரியர்களுக்கு வேறுபட்ட சம்பள வீதங்கள் வழங்கப்படுகின்றன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) உள்ளாட்சிமன்ற உயர்நிலைப்பள்ளிகளும் உதவிபெறும் உயர்நிலைப்பள்ளிகளும், ரூ. 90—4—110—3—140. உள்ளாட்சி மன்ற உயர்தர துவக்கப் பள்ளிகளும் உதவி பெறும் உயர்துவக்கப் பள்ளிகளும் : ரூ. 65—1—70—2—90 ; அரசினர்ப்பள்ளிகள் — முதல் நிலை : ரூ. 90—4—110—3—140; அரசினர்ப் பள்ளிகள்—இரண்டாம் நிலை: ரூ. 70—2—100.

Tiruchendur Panchayat Union School Teachers

*45. *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether it is a fact that the salaries of teachers serving in schools in Tiruchendur Panchayat Union remain unpaid since November, 1969; and

(*b*) if so, the reasons therefor ?

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள்

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பளங்கள் 1969 நவம்பர் முதல் கொடுக்கப்படாமலிருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?